**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7280

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.01.2024

Accepted: 03.03.2024

Published: 01.04.2024

Citation:
Ganeson, N. G. (2024). Multifaceted Perspective in 'Santhana Thoni.' *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 59–64.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7280

*Corresponding Author:
navingganeson@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Multifaceted Perspective in 'Santhana Thoni'

**Navin G Ganeson**
*Postgraduate Student (Master of Education)*
*Sultan Idris Education University,Tanjung Malim, Malaysia*
*https://orcid.org/0000-0003-2683-0355*

**Abstract**

*This study is based on the multifaceted view of the collection of Tamil poetry 'Santhana Thoni'. In 'Santhana Thoni' an anthology of Tamil poetry, the poems are classified into six sub-titles. Based on this, the purpose of this study is to examine the multifaceted perspective expressed by the poet in his poetry. This study was carried out in a qualitative approach. The data for this review was handled in a library research approach. This research has been carried out in a descriptive approach using books, research articles, etc. Suitable for this type of library research. A total of five viewpoints have been identified and presented in this study based on a multifaceted perspective. Through this study we can know that there is a multifaceted perspective in the poetry collection 'Santhana Thoni'.*

***Keywords:*** *'Santhana Thoni', Multifaceted Perspective, Tamil Poetry, Malaysian Literature*

**References**

1. Chandrasekar. (2022). Nature Commentary on Sangam Poetries.PULAM : International Journal of Tamilology Studies, 31-42.
2. Dewan Bahasa Tamil Bhd. (2022). Malaiyakattokai.Wilayah Persekutuan: Dewan Bahasa Tamil Bhd.
3. Manonmani Devi. (2017). Ilakiya Ayvil Oru Tumi (A Compilation of Literature Research Paper).Perak: My Story Enterprise.
4. Manonmnai Devi&Saraswathi. (2020). Kavittural (Collection of Malaysian Tamil Poems.Kuala Lumpur: UMA Publications.
5. Puliyoork Kesigan. (2012). Tholkaappiyam (Ezhuttu, Chol, Porul).Chennai: Saradha Publication.
6. Samikkanu Jabamoney&Rajantheran. (2020). The Growth of Tamil Poetry in Malaysia.Chennai: Sakthi Publication.
7. Seeniwasan Redi. (2023). Feminism Thoughts in a Traditional Poem Book Titled 'Uravugal'.Malaysian Journal of Tamil, 227-231.
8. Usharani Saminathan. (2023). Santhana Thoni (Collection of Traditional Poems). Kuala Lumpur: Firdaus Press.
9. Varadarasan, M. (2015). Tamizh Ilakkiya Varalaru - History of Tamil Literature. Chennai: Sahitya Akademi.

# சந்தனத் தோணி தமிழ்க் கவிதைத் தொகுப்பில் பன்முகப் பார்வை

**நவீன் கணேசன்**
முதுநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பு மாணவர்
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்
தஞ்சோங்கு மாலிம், மலேசியா

**ஆய்வுச் சுருக்கம்**
*'சந்தனத் தோணி' தமிழ்க்கவிதைத் தொகுப்பு நூலில் கவிதைகள் ஆறுசிறுதலைப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், கவிஞர் தனது கவிதையில் வெளிப்படுத்திய பன்முகப் பார்வைகளை ஆய்வு செய்வதே நோக்கமாகும். இவ் ஆய்வு, பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுக்கான தரவுகள் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இவ்வகை ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வில் பன்முகப் பார்வை அடிப்படையில் மொத்தம் ஐந்து பார்வைக் கண்டறிந்து முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் வழி 'சந்தனத் தோணி' கவிதைத் தொகுப்பில் பன்முகப் பார்வை இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

***கருச்சொற்கள்:*** *சந்தனத் தோணி, பன்முகப் பார்வை, தமிழ்க்கவிதை, மலேசிய இலக்கியம்*

## முன்னுரை

தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளின் வரலாறு கொண்டது. தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவத்திலே தொடங்கியது. செய்யுள் வடிவமாக இருந்தாலும் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது, தமிழ்க் கவிதை. சங்க இலக்கியத்திற்குப் பிறகு, தமிழ்க் கவிதையில் வெண்பா வடிவம் ஆளுகை கொண்டது. திருத்தக்கத்தேவர் காலம் தொடங்கி விருத்த வடிவங்கள் கொண்ட தமிழ்க் கவிதைகள் அதிகம் படைக்கப் பெற்றன. பதினேழாம் நூற்றாண்டு தொடங்கி, தமிழ்க் கவிதைகளில் சிந்து, கண்ணி, கும்மி ஆகிய வடிவங்கள் புதியதாகத் தோன்றியுள்ளன (Varadarasan, 2015).

இது போன்று பல வகை வடிவங்களைத் தாங்கி இன்றைய செயற்கை நுண்ணறிவு காலக்கட்டத்திலும் தமிழ்க் கவிதை நிலைத்து வருகின்றது. தமிழ்க் கவிதை எனும் இலக்கிய வகை தமிழகத்தில் மட்டுமில்லாமல் 157 ஆண்டுகள் கடந்தும் மலேசியாவிலும் வேரூன்றியுள்ளது. மலேசிய மண்ணில் மரபுகவிதை இலக்கியம் தோன்றிப் வளர்ச்சியையும் பெருமையையும் கொண்டு பரவி நிற்கிறது. மலாயாவிற்கு வருகை புரிந்த தமிழர்கள் படைத்த முதல் இலக்கிய வடிவம் மரபுக் கவிதையாகும். ஆக, மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முதலாவது தோன்றிய இலக்கியம் கவிதை இலக்கியமாகும். மலேசியாவில் இதுவரை ஏறக்குறைய 500 மரபு கவிதைத் தொகுப்பு வெளியாகியுள்ளன (Samikkanu Jabamoney Rajantheran, 2020).

ஆய்வுக்குத் தேர்வுசெய்யப்பட்ட கவிதைத் தொகுப்பான 'சந்தனத் தோணி', ஒரு மரபு கவிதை நூலாகும். இக்கவிதைத் தொகுப்பின் எழுத்தாளர் மலேசியக் கவிஞர் உசாராணி சாமிநாதன். 2023ஆம் ஆண்டில் இந்நூல் வெளியீடு கண்டுள்ளது. 'சந்தனத் தோணி' கவிதைத் தொகுப்பு 108 பக்கங்களில் இறை

சிந்தனையும் இயற்கையும், மொழியும் இலக்கியமும் கலையும், பெண்மையும் தாய்மையும், நாடும் இனமும் குமுகாயமும், வாழ்த்து, பல்சுவை ஆகிய ஆறு பிரிவுகளை உள்ளடக்கித் தொகுக்கப்பட்டு இருக்கின்றது (Usharani Saminathan, 2023). இந்நூல் உசாராணி அவர்களின் முதல் தமிழ்க் கவிதைத் தொகுப்பாகும். இதற்கு முன்பு, "மலேசிய நண்பன்", "தமிழ் மலர்", "மக்கள் ஓசை" ஆகிய உள்நாட்டு நாளிதழிலும் "கவித்தூறல்" எனும் மலேசியத் தமிழ்க் கவிதைத் தொகுப்பிலும் மலையகத் தொகை எனும் மலேசியத் தமிழ்க் கவிதைத் தொகுப்பிலும் உசாராணியின் கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன (Manonmnai Devi Saraswathi, 2020) (Dewan Bahasa Tamil Bhd, 2022).

## ஆய்வு நெறிமுறை

இவ்ஆய்வுப் பண்புசார் அணுகு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்ஆய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கவியல் அணுகுமுறையில் தரவுகள் விளக்கப்பட்டுள்ளன.

## தரவுப் பகுப்பாய்வு

### இயற்கைக் காதல்

தொல்காப்பியர் தன் தன்மையில் மாறுபடாது நிற்கும் பொருள் அனைத்தும் இயற்கையே என்று இயற்கையைப் பற்றி வரையறுத்துள்ளார்.

**"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்"**
**தொல். சொல். கிளவி. நூ. 19**

எனும் நூற்பாவில் இயற்கைப் பொருள்கள் அனைத்தும் எவ்வித ஆக்கமும் இன்றி இயற்கையாக அல்லது இயல்பாகத் தோன்றும் என்கிறார், தொல்காப்பியர் (Puliyoork Kesigan, 2012). மனிதர்கள் தனது ஐம்புலன்களால் உணரக்கூடிய புற உலகு என்று தனிநாயக அடிகள் இயற்கையைப் பற்றிக் கூறியுள்ளார். மேலும், இயற்கை என்பது இறைமைத் தன்மை கொண்டது; இயற்கை பார்க்கக்கூடியது; நுகரக்கூடியது; வியப்பாக உற்றுநோக்கக் கூடியது (Chandrasekar, 2022). இதேபோல் கவிஞரும் இயற்கையை வியப்பாக உற்றுநோக்கிய செய்தியைக் கவிதைகளில் காணமுடிகிறது.

**பருவதம் மேலிருந்து பள்ளமதில் வீழத்**
**தருவியும் பாய்ந்தோடி ஆனந்தம் பொங்கும்**
**நதிகளின் சங்கீதம் நாணலெனக் கேட்டு**
**மதிமயங்கும் மீன்களும் மான்களும் நாளும்**
**நிறைவாக வாழ்த்திசைக்க, நீலவான் மேகத்தில்**
**பறவைகளும் வந்துலவும் அங்கு!**
**நதியின் சங்கீதம், (ப. 5)**

என்ற பாவின் வழி கவிஞர் அருவி கொட்டும் சூழலை மனக்கண்ணில் உற்றுநோக்கி இயற்கை மீதான அன்பை வெளிப்படுத்துகிறார். தொடர்ந்து, இயற்கை தற்போது எதிர்நோக்கும் இடர்களை எண்ணி வருந்தியுள்ளார், கவிஞர். இதனை,

**"கண்ணின் மணியெனக் காத்திடும் தூய்மையே**
**மண்ணின் வளமாம் மறுப்பாரோ? அம்மானை!**
**எண்ணிலா நோயின் இருப்பிடம் யாதெனிலோ**
**கண்ணிலே காணாக் கழிவுகளே அம்மானை!**
**கண்ணெனவே தூய்மை துலங்கிடும் அம்மானை!..'**
**சுற்றுச்சூழல் காப்போம், (ப. 7)**

எனும் கவிதை ஆங்காங்கே இயற்கையை மாசுபடுத்தும் நிகழ்வுகள் நடந்துகொண்டிருப்பதால் பலவித நோய்களால் நாமும் இயற்கையும் அழிந்து வருவதை எண்ணி கவிஞர் வாடியுள்ளதைக் காண்பிக்கின்றது. இயற்கையை நேசித்து, அதைப் பேணிக் காத்தல் வேண்டும் என்று கவிஞர் நமக்கு உணர்த்துகின்றார்.

### மொழியுணர்வு

பண்டைய இலக்கியங்களில் மொழியைக் குறித்துப் பெருமளவில் பாக்களோ கவிதைகளோ இயற்றப்படவில்லை என்று கூறலாம். ஆனால், இப்போது மொழிப்பற்று நம்மிடையே குறைந்து வரும் சூழ்நிலையில் தற்காலப் படைப்புகளில் மொழிக் குறித்துப் கவிஞர்கள் பாடியுள்ளார்கள். சந்தனத் தோணியில் சில கவிதைகளில் மொழி

உணர்வினைக் கவிஞர் விவரிக்கின்றார்.

**..சுமையாய் உன்னைக் கருதாமல்**
**சுகமாய் எண்ணிக் கற்றேனே**
**..............................................**
**உமையே என்றும் வணங்கிடுவேன்**
**உயிராய் எண்ணி வாழ்ந்திடுவேன்..**

**மொழி இனத்தின் உயிர், ப. 10-11**

என்ற கவிதையில் விரும்பித் தமிழைக் கற்றேன் என்றும் தாய்மொழியை உயிரெனக் கருதி வாழ்வேன் என்றும் கவிஞரின் மொழியுணர்வு இவ்வடிகளில் வெளிப்படுகின்றது. மேலும்,

**"எம்மொழியும் காணாத இலக்கணங்கள் வகுத்தும்**
**ஈரடிக்குள் உலகோர்க்கு ஞானத்தைப் படைத்தும்**
**நம்மொழியில் சொல்வளங்கள் நற்பெயர்கள் இருந்தும்**
**நாணமற்று வேற்றுமொழி கடன் கேட்டல் சிறப்போ?**
**செம்மொழியில் அறங்கூறும் திருநூல்கள் மறந்து**
**செங்கரையான் மரமரித்தல் போல் நடத்தல் முறையோ?**
**தம்மொழியில் பாட்டியற்றும் சான்றோர்கள் தெரிந்தே**
**சாராத மொழியேற்கும் அறியாமை நன்றோ?**

**அறியாமை, ப. 14**

எனும் கவிதையின் வழி இன்றைய தமிழர்கள் தமிழ் மொழி அறிவு இல்லாமலும் வேற்று மொழியில் தங்களின் பிள்ளைகளுக்குப் பெயரிடும் அவலத்தையும் அறத்தைக் கற்றுக்கொடுக்கும் நூல்கள் தமிழில் இருந்தும் அதைக் கற்றுத் அதன்படி வாழ்வில் நடக்காமல் தவறான பாதைகளில் செல்லும் மூடர்களையும் இது போன்றவர்களின் அறியாமையை எண்ணி வருந்திக் கவிதையில் சாடியுள்ளார். தமிழை முறை படி கற்று, அதன்படி வாழ்வில் நடக்க வேண்டும் என்று கவிதையின் வழி கவிஞர் கேட்டுள்ளார்.

## பெண்மையும் தாய்மையும்

இன்றைய உலகில் ஆண்களோடு சரிசமமாக நில்லாமல் ஆணினத்தைத் தாண்டியும் பெண்கள் பல துறைகளில் முயன்று வெற்றியும் பெற்று வருகின்றனர். பெண்கள் தயங்கி நில்லாமல் முறையான அனைத்து இடங்களிலும் துறைகளிலும் துணிவுடனும் வலிமைக் குணத்துடனும் ஈடுபட வேண்டும் (Seeniwasan Redi, 2023). இதேபோல, பெண்கள் பல துறைகளில் துணிவுடன் ஈடுபடுவதைக் குறித்தும் பெண்ணின் நிலைத்தன்மை குறித்தும் விவரிக்கின்றார், கவிஞர்.

**அறிவியல் பொருளியல் மருத்துவ இயலென**
**ஆற்றலைக் காட்டுவோர் பெண்ணன்றோ!**
**வறியதோர் நிலையிலும் கற்பையும் போற்றிடும்**
**வலிமையும் மிக்கவள் பெண்ணன்றோ!**
**நெறியுடன் வாழவும் நாணமும் மடத்தையும்**
**நீக்கியே நிமிர்பவள் பெண்ணன்றோ!**
**வெறியுடன் தீமையை விரட்டிட உழைத்துமே**
**வீறுடன் எதிர்ப்பவள் பெண்ணன்றோ!**

**யாவும் பெண்ணன்றோ!, ப. 45**

தற்கால உலகில் தனது கற்பையும் காத்துப் பல துறைகளில் வெற்றி நடைபோட வேண்டும் என்றும் முறையாக வாழ்வதற்கு நாணமும் மடமும் பெண்களுக்குத் தேவயற்றது என்கிறார் கவிஞர். தன்னைச் சூழும் தீமைகளை விரட்டி வலிமையுடன் போராடி எதிர்க்க வேண்டும் என்று பெண்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார், கவிஞர். மேலும், கவிஞர் தாய்மையைப் போற்றியும் கவிதையில் வரைந்துள்ளார்.

**"எண்ணமெல்லாம் குடும்பமென எண்ணுகின்ற இறைவியவள்**
**...............................................................**
**தண்ணொளியைப் பிறர்க்காகத் தந்திடுவாள் வாழ்நாளில்**
**...............................................................**
**கண்ணெதிரே தோன்றிநின்ற கடவுளன்றோ அன்னையிவள்**
**மண்ணுலகில் பிறந்திட்ட மாதரசி வாழ்கவென்றே..."**

**அன்னை, ப. 43**

பெற்ற தாயை இறைக்கு ஒப்பாகவும் தனது வாழ்நாள் முழுதும் கணவன், பிள்ளைகள் போன்ற பிறருக்காகவே வாழ்ந்து முடிப்பவள் என்றும் மனிதப் புறக் கண்களுக்குத் தெரியும் கடவுள் என்றும் போற்றுகிறார்,

கவிஞர். நமது தாயை மதித்து, அவர்களைக் காக்க வேண்டும் என்ற கருத்தையும் கவிஞர் இக்கவிதையின் வழி உணர்த்தியுள்ளார்.

### நாட்டுப்பற்று

நாட்டுப்பற்று என்பது நாம் பிறந்த வாழும் நாட்டின் மீது வைத்திருக்கும் அன்பைக் குறிக்கின்றது. நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் நாட்டுப்பற்று என்பது மிகவும் முக்கியம். ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பை அளவிட அளவு கோல் இல்லை. அதைப்போல நாம் ஒவ்வொருவரும் நம் நாட்டின் பால் பற்றுக் கொண்டு நாட்டுப்பற்றுடன் வாழவேண்டும். தான் பிறந்து வளர்ந்த நாட்டின் மீதுள்ள அன்பினைக் கவியாக வரைந்துள்ளார், கவிஞர். இதனை,

> ..................
> ***வல்லமை தந்து வாழ்வினைச் செழிக்க வைத்திடவே***
> ***நல்லுரை எங்கும் நயமுடன் காட்டும் நன்னாடே!***
> ............
> ***பாடிடு நீயும் பண்புடை நாட்டின் பழக்கத்தை!***
> ***எழில்மிகு நாடு, ப. 48***

என்ற வரிகளில் நாட்டின் மீது வைத்திருக்கும் பற்றினை வெளிப்படுத்துகிறார். ஒரு குடிமகனின் வாழ்வைச் செழிக்க வைக்க வழிகளைத் தரும் நாடு என்று தனது மலேசியத் திருநாட்டினைப் பெருமையாகப் பேசுகிறார், கவிஞர். நாட்டின் நல்ல பழக்கவழக்கங்களை மற்றவர்களுக்கும் நாம் எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு இருக்கிறது என்று கவிஞர் எடுத்துரைக்கின்றார். மேலும்,

> "..........................................................
> ..............................................
> ***நாட்டில் உயர்வை நாட்டிடவே***
> ***நதிபோல் நீயும் நடந்திடுவாய்!"***
> ***நாட்டின் உயர்வு, ப. 53***

நாட்டின் உயர்வையும் மதிப்பையும் கூட்டுவது ஒவ்வொரு குடிமகனின் கடப்பாடு என்று கவிஞர் அறுசீர் விருத்தப் பாவின் வழி உணர்த்தியுள்ளார். நாட்டின் பெயரை நல்ல முறையில் ஓங்கச் செய்வதற்கு உண்டான கடைமைகளை நாம் இன்றே செய்ய வேண்டும் என்று சொல்கிறார், கவிஞர்.

### தமிழினமும் குமுகாயமும்

தமிழினமும் தமிழ்க் குமுகாயமும் சிறுபான்மை நபர்களின் பொறுப்பற்ற செயல்களினால் மற்றவர் முன்னிலையில் மதிப்பிழந்து கிடக்கின்றது. இன்றையத் தமிழர்கள் மது அருந்துதல், குண்டர் கும்பல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடுதல், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்காமை போன்ற செயல்களினால் பின்தங்கி உள்ளன. இந்நிலையை மாற்ற வேண்டிக் கவிஞர் சாடுகிறார்.

> ***"உண்ணல் புணர்தல் உறங்குதல் வாழ்வென உள்ளவர்கள்***
> ***மண்ணில் விலங்குபோல் வாழ்ந்து மடிதலும் மாண்பிலையே***
> ***எண்ணம் செயல்கள் எழுச்சி இலக்கில் இயங்காது***
> ***மண்ணிலும் விண்ணிலும் மாபெரும் மாற்றம் வருவதெங்கே?"***
> ***இழிநிலை, ப. 53***

என்ற பாடல் வழி சமுதாயத்திற்குப் பயனின்றி வாழும் மனிதர்களை இலக்கு இல்லாமல் வாழும் விலங்கு என்று இகழ்ந்துரைக்கின்றார், கவிஞர். பிறப்பதும் இறப்பதும் என்று வாழாமல் இனத்திற்கு அல்லது குமுகாயத்திற்கு ஏதாவது பயனுள்ள வகையில் செய்ய வேண்டும் என்று இக்கவிதை உணர்த்துகிறது. இப்படி ஏதும் செய்யாமல் இருந்தால் இந்த உலகத்திலும் விண்ணுலகத்திலும் எந்த மாற்றமும் நம்முடைய சமுதாயத்திற்கு நடக்காது என்று இழிநிலையைக் கவிஞர் பாடுகின்றார். தொடர்ந்து, தமிழனத்தினிடையும் தமிழக் குமுகாயத்தினரினிடையும் ஒற்றுமை பண்பு மிகவும் அவசியம் என்று கவிஞர் எண்ணுகிறார். இதனை,

**"ஒற்று மையும் உயர்வென்றே**
**ஒன்றாய் நாமும் கூடிடுவோம்**
**பற்றாய் நாமும் பழகிடவே**
**பகையும் எதிர்க்கத் தயங்கிடுமே**
**கற்ற தற்காப் புக்கலைகள்**
**கண்ணாய்ப் பயிற்சி எடுத்திடவே**
**உற்ற உறவும் ஒன்றாகி,**
**உறுதி உணர்வைக் காட்டிடுவோம்!"**
**எழுவோம், ப. 56**

என்ற பாடலில் தமிழ இனத்தின் இடையே ஒற்றுமையின் முக்கியத்துவத்தைக் குறித்துக் கூறுகிறார், கவிஞர். தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடன் செயல்பட்டால் எந்தத் தடைகளையும் களைந்து வெற்றிப் பெற்ற குமுகாயமாக முன்னே வரலாம் என்ற தொலைநோக்குப் பார்வையினை முன் வைத்துள்ளார், கவிஞர்.

## முடிவுரை

கவிஞர் உசாராணியின்பார்வைகள் பல வகையில் விரிந்து படர்ந்துள்ள நிலையை அவரது 'சந்தனத் தோணி' தமிழ்க்கவிதைத் தொகுப்புக் காட்டுகின்றது. இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் மரபுடன் எழுதப்பட்ட தோடு படிப்பவர்களுக்குப் பன்முகப் பார்வையையும் கருத்துகளையும் எண்ணங்களையும் உணர்த்தியுள்ளன.

## துணைநூற்பட்டியல்

1. சந்திரசேகர். 2022. சங்கக் கவிதைகள் பற்றிய இயற்கை விளக்கவுரை தமிழியல் ஆய்வுகளின் சர்வதேச இதழ், 31-42.
2. திவான் பஹாசா தமிழ் பிஎச்டி. 2022. மலையகத்தோகை. விலயா பெர்செ குடுவான்: திவான் பஹாசா தமிழ் பிஎச்டி.
3. மனோன்மணி தேவி. 2017. இலக்கிய ஆய்வில் ஒரு துமி (இலக்கிய ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு).பேராக்: என் கதை நிறுவனம்.
4. மனோன்மை தேவி சரஸ்வதி. 2020. கவிச்சுரல் (மலேசிய தமிழ் கவிதைகளின் தொகுப்பு. கோலாலம்பூர்: UMA வெளியீடுகள்.
5. புலியூர்க் கேசிகன். (2012) தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்). சென்னை: சாரதா வெளியீடு.